**சித்தப்பா திரு K.R.பிரகதீசன் அவர்களுக்கு,**

பிறந்தநாள் **23-02-2017**

என்பத்து எட்டாம் அகவை தன்னை
இனியதாய் நிறைந்து ஏகி,
எங்களின் மனதுள் நிறைந்து
எந்நாளும் வாழும் சித்தப்பா!
இனியதாய் இன்னும் பலநாள்
எங்களுடன் வாழ்ந்திருக்க,
இறையை வேண்டுவேனே!
உழலும் பிணிகள் குறைந்து,
உன்னத மனமும் மகிழ்ந்து,
நன்னிய காலம் என்றே;
நாள்களும் வந்து போக,
தங்கள் சீருயர் ஆசி பெற்றே,
செழிப்புடன் யாவரும் வாழ்ந்திருப்போம்!

**89- வது பிறந்தநாள் இன்று!(23-02-2018)**

இற்றைநாள் மண்ணில் தோன்றி,
நற்றறிவால் நலம்பட வளர்ந்து,
போற்றிய மரபுள் நிறைந்தே,
முற்றிய அறிவின் கலனாய்,
முதுமையில் நிறைந்த சித்தப்பா,
வாட்டுமோர் பிணிகள் நீங்கி,
மாற்றமில் மன உறுதியோடும்,
நன்னிய வாழ்வு பெற,
போற்றிய இறைவன் தன்னை;
பணிந்து யான் வேண்டுவேனே!*